IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS.No. 31/2005 Date: 25.08.2025

DW1- கோமதி

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

இந்த வழக்கில் நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லையென்றால், சரிதான். என் தாயாரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். வேலு, ஜெயமணி ஆகியோர் என் உடன்பிறந்த சகோதர சகோதரிகள் என்றால், சரியல்ல. என் அம்மா கொழந்தையம்மாள் பிறந்த ஊர் மேட்டுர் பொறையூர் என்றால், சரிதான். அவருக்கும் கொட்டாயூர் ராமசாமிக்கும் திருமணமானது என்றால், சரிதான். மேற்படி கொழந்தையம்மாளுக்கும் ராமசாமிக்கும் பிறந்தவர்கள் நானும், வேலு, ஜெயமணி, யுவராஜ் ஆகியோர்கள் என்றால், சரியல்ல. வேலு மட்டுந்தான் அவர்களுக்கு பிறந்த மகன். நான் அதற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லையென்றால், சரிதான். நான் சின்னப்பம்பட்டி அருகில் கப்பாரத்தாம்பட்டியில் வசிக்கிறேன் என்றால், சரிதான். இத்தாவா வாதிகள் என்மீதும் மற்றும் சிலர்மீதும் எடப்பாடி உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 142/2020 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால், சரிதான். அந்த வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரிதான். அந்த சாட்சியத்தில் குண்டியாக்கவுண்டர், பெரியண்ணகவுண்டர் இரு குடும்பத்தாருக்கும் முறைப்படி பாகம் பிரிக்கவில்லையென்றால், சரிதான் என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி சாட்சியம் பி.வா.சா.ஆ.5. பி.வா.சா.ஆ.3 மற்றும் 4 வழக்கில் நான் தரப்பினர் இல்லையென்றால், சரிதான். எனக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால், சரியல்ல. 5, 6 பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்கும் எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் ஆறுமுகத்திற்கு வாரிசு என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லையென்றால், சரியல்ல. நான் ஆறுமுகத்திற்கு வாரிசு என்று பொய்யாக வாரிசு சான்றிதழ் பெற்று அதை பயன்படுத்தி தாவா சொத்திற்கு என் பெயரை பட்டாவில் சேர்த்துள்ளேன் என்றால், சரியாகத்தான் சேர்த்துள்ளேன். பின்னிட்டு சங்ககிரி கோட்டாட்சியரின்

மேல்முறையீட்டின்பேரில் என்னுடைய பட்டா பெயர் நீக்கம் செய்யப்பட்டது என்றால், சரிதான். அந்த



உத்தரவின்மீது நான் எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யவில்லையென்றால், சரியல்ல. தாவா சொத்தில் ஆறுமுகம் பாகத்தை நீதிமன்ற ஏலத்தில் விற்பனை செய்தபோது 5, 6 பிரதிவாதிகள் ஏலம் எடுத்துள்ளார்கள் என்றால், சரிதான். அந்த ஏலம் பின்னிட்டு ரத்து செய்யப்பட்டு விட்டது. அந்த ரத்து உத்தரவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். நான் 5, 6 பிரதிவாதிகள் பாகத்தை பொறுத்து 2007 ஆண்டு முதல் பல பொய்யான ஆவணங்களை ஏற்படுத்தி, அது பின்னிட்டு ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. அவைகள் அனைத்தும் கடனுக்காக ஏற்படுத்தப்பட்டவை. அவ்வாறு ஆவணம் ஏற்படுத்த எனக்கு உரிமையில்லை என்றால், சரியல்ல. 5,6 பிரதிவாதிகளுடன் சேர்ந்து கொண்டு பொய் ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளேன் என்றால், சரியல்ல. நாங்கள் வழக்கு சொத்திற்கு முற்றிலும் சம்மந்தமில்லாதவர்கள் என்றால், சரியல்ல.

ஒப்பம்/- கோமதி

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.